சிறுவர் பாடல்கள்

# முற்றத்துப் பூக்கள்

மு. பொன்னம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றத்துப் பூக்கள்

( சிறுவர் பாடல்கள் )

மு. பொன்னம்பலம்

சுயம் வெளியீடு 2

புங்குடுதீவு - 1.

விலை : ரூபா 3-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைகள் செய்வோம்.

தாரணி வா
தமிழ் படி
ஆரணி வா
ஆங்கிலம் கல்

விமலா வா
விஞ்ஞானம் செய்
கமலா வா
கவிதைகள் தா

இந்திரா வா
இசைகள் பாடு
நந்தினி வா
நடனமிடு

கலைகள் எல்லாம்
எங்கள் கையில்
உலகை அன்புக்
கலையால் வெல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முற்றத்துப் பூக்கள்

முற்றத்திலே பூக்களெல்லாம்
பூத்திருக்குது — அதன்
மொட்டெடுத்து மாலை செய்வோம்
வாரும் தோழரே.

முல்லை மலர் பூத்திருக்கு
வெள்ளிகள் போலே — ஊசி
மல்லிகையும் காத்திருக்கு
அள்ளிச் செல்லுங்கள்.

செவ்வரத்தை தூங்கிறது
சேவற் கொண்டை போல் – அதை
கொய்தெடுத்து கோயில் கட்டி
முடியில் வைப்போமே.

வெள்ளை ரோஜா பூமலர்ந்து
கையைக் காட்டுது – அதன்
உள்ளே ஒரு வண்டிருந்து
குய்யோ என்குது.

அண்டையில் ஓர் பட்டிமலர்
ஆசை ஊட்டுது அதைக்
கொண்டையிலே சூடி ரதி
குதித்து வருகிறாள்.

வண்ண வண்ணப் பூக்கள் எங்கும்
வாசம் பரப்புது — அவை
கண்ணே மணியே என்று எம்மைக்
கட்டித் தழுவுது.



## பட்டம் விடுவோம்

காற்று நன்றாய் வீசுதே
பட்டம் கட்டி ஏற்றுவோம்
பார்க்க நன்றாய் இருக்குமே
பட்டம் கட்டி ஏற்றுவோம்

பாம்புப் பட்டம் ஏற்றினால்
நெளிந்து வானில் பறக்குமே
கொக்குப் பட்டம் ஏற்றினால்
எழுந்து வெளியைக் குடையுமே

சதுரப் பட்டம் கட்டுவோம்
தட்டுப்போல மிதக்குமே
அதிலே ஏறிக் குந்திட
ஆசையாக இருக்குதே.

"விண்ணைக்" கட்டி எழுப்புவோம்
வீணை விண்ணில் பாடுமே
கண்ணுக் கெட்டாத் தூரத்தில்
காற்றில் நடனம் ஆடுமே.

நூலை விட்டுக் கொடுத்திட
மேலே மேலே ஏறுதே
வால் அறுந்து போனதும்
வந்து நிலத்தில் குத்துதே

பட்டம் போல நாங்களும்
பறந்து செல்வோம் திக்கெலாம்
கட்டுப்பாடு என்னும் நூல்
கயிற்றைப் பற்றி ஏறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைப் புறுவே வா

விடுதலைப் புறுவே விரைந்து வா - எங்கள்
வீட்டினில் அமர்ந்து பாடவா
அடிமை விலங்கை அறுக்க வா - நாம்
ஆனந்தமாய்க் கூத்தாட வா

சிறுவர் நாங்கள் சிரிக்க வா - எங்கள்
தேசம் ஓங்கித் தழைக்க வா
வறுமை நோயை விரட்ட வா - சம
தர்மம் வெல்ல பறந்து வா

கொடுமை அரசு அழிய வா - கொலை
கொள்ளை யாவும் தொலைய வா
விடியல் போலச் சிலிர்த்து வா - கல்வி
வீரம் செல்வம் விளங்க வா

விடுதலைப் புறுவே விரைந்து வா - எங்கள்
வீட்டினில் அமர்ந்து பாட வா
கடவுள் போலச் சிறுவர்கள் - ~~அது~~
களங்கம் இன்றிச் சிறக்க வா



## மழையும் வெயிலும்

பூமழை பெய்யுது வானம் - வெயில்
புகுந்து சிரிக்குது தானும்
கோமகள் வருகின்ற போது - பட்டுக்
குடையைப் பிடிப்பவன் போலே

நூல் மழை பெய்யுது வானம் - வெயில்
நுழைந்து சிரிக்குது தானும்
பால்நிறச் சேலையின் மேலே - சரிகை
படர்ந்து கிடப்பதைப் போலே

கல்மழை பெய்யுது வானம் - வெயில்
கலந்து சிரிக்குது தானும்
பிள்ளைகள் அழுகின்றபோது - சிறு
புன்னகை செய்வது போலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வி எந்தன் பிள்ளை

சின்னச் சின்னப் பிள்ளை
செல்வி எந்தன் பிள்ளை
கண்ணைக் கண்ணை வெட்டும்
காதை முறுக்கக் கத்தும்

முடுக்கி விட்டால் பாப்பா
முன்னும் பின்னும் ஆடும்
கழுத்தைக் கூடப் பின்னால்
அழகாய் திருப்பிக் காட்டும்

பட்டுச் சட்டை போட்டு
பொட்டு வைத்துப் பார்ப்பேன்
கட்டை மயிரைச் சீவி
கன்ன உச்சி இழுப்பேன்

மடியில் கிடத்தி கொஞ்சம்
பாலைக் குடிக்க வைப்பேன்
அடித்தால் கூட எந்தன்
பிள்ளை அழவே மாட்டாள்

ஆராராரோ பாடி
அவளைத் தூங்க வைப்பேன்
நேரம் காலமின்றி
நல்லாய் தூங்கும் பாப்பா



## எங்கள் நாடு

எங்கள் ஈழத் தமிழகம்
எங்கள் நாடு என்குவோம்
எங்கள் ஈழத் தமிழகம்
எங்கள் வீடு என்குவோம்

நாடும் வீடும் நமக்கிது
நாங்கள் வாழும் நிலமிது
காலம் காலமாய் எம்மைக்
காக்கும் தெய்வத் தாயிது

பாட்டி வாழ்ந்த குடிலிது
பாட்டன் நடந்த தெருவிது
கூட்டமாகக் கூடி நாம்
கலைகள் வளர்த்த நாடிது

அன்பை ஊட்டும் எமதகம்
அறிவை ஏற்றும் தாயகம்
பண்பு வீரம் கொண்டெமை
காக்கும் ஈழத் தமிழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்புலியில் பூபாலன்

பூபாலா பூபாலா எங்கே போனாய்?
பூமிக்கு அப்பாலே நானும் போனேன்

பூமிக்கு அப்பாலே எங்கே போனாய்?
அம்புலியைப் பார்த்துவர நானும் போனேன்

அம்புலியைப் பார்த்துவர எப்படிப் போனாய்?
அமெரிக்கா செய்துவிடும் கப்பலில்போனேன்

அம்புலியில் என்னென்ன பார்த்து வந்தாய்?
பார்ப்பதற்கு அங்கொன்றும் இல்லை, ஔவைப்
சுட
பாட்டியும் நான் போக ஒழிந்து கொண்டாள்
பாட்டி என்று நம்முன்னோர் எதனைச்
சொன்னார்

அம்புலியின் பாறைகளைக் கண்டு சொன்னார்
அம்புலியில் நீ என்ன அறிந்து வந்தாய்?

அந்தரத்தில் நான் நின்றேன் கொஞ்ச நேரம்
காற்றில்லை, நீரில்லை உணவுமில்லை

கதைப்பதற்கு ஆள்கூட அங்கே இல்லை
ஆளில்லா ஊருக்கா இத்தனை போட்டி?

ஆளிருக்கும் ஊர்களுக்கு உதவி செய்வோம்
அப்புறம் நாம் அம்புலிக்குப் பயணம்
செய்வோம்



## மழை விழா

மழையைக் கண்டு தவளைத் தாத்தா
மத்தளம் கொட்டினார்
பழைய பாட்டை தினம் தினமும்
பாடிக் காட்டினார்

தட்டான் பூச்சி வெளியில் வந்து
சிறகடிக்குது
தம்பளப் பூச்சி மண்ணில் ஊர்ந்து
பட்டு விரிக்குது

குட்டான் சோறு ஆக்கி ஆக்கி
அக்கா கொட்டினாள்
குடிசை மண்ணில் கட்டிக் கட்டி
அண்ணன் இடிக்கிறான்

வேலியெல்லாம் கார்த்திகைப் பூ
விளக்கு வைக்குது
வயல்களெல்லாம் கொக்கெழுந்து
வெள்ளை கட்டுது

வீதியெல்லாம் வெள்ளம், காகம்
விழுந்து தோயுது
பரலர் விடும் வள்ளம் அதற்குள்
நனைந்து சாயுது

சூரியனார் குளிரைக் கண்டு
முகிலைப் போர்க்கிறார்
சோம்பலோடு இடைக்கிடை தன்
கண்ணைச் சிமிட்டிறார்

மாரியக்கா மின்னல் இடி
காற்றில் வருகிறாள்
மரங்கொடியை முழுகவைத்து
கரகம் ஆடுறாள்

(மழையைக் கண்டு...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பியின் நடை

அம்பி காலைத் தூக்கியே
அழகுநடை செய்கிறான்
கம்பி மேலே நடத்தல்போல்
காலை நடுங்க வைக்கிறான்

தக்குப் புக்குத் தக்கென
தாளம் போட்டு நடக்கிறான்
பக்கம் நிற்கும் அன்னையை
பார்த்து பார்த்து நடக்கிறான்

சிறிது தூரம் சென்றதும்
திரும்பிப் பார்த்துச் சிரிக்கிறான்
குதிரை மீது ஏறியே
குதித்து வந்த ராஜா போல்

மூன்று சில்லு வண்டியை
முன்னே தள்ளிச் செல்கிறான்
நான்கு பல்லு இடைக்கிடை
காட்டி தன்னுள் சிரிக்கிறான்



## கண்ணாடி வளையல்

வண்ண வண்ண வளையல் - மாமா
வாங்கித் தந்த வளையல்
கண்ணைப் பறிக்கும் வளையல் - நல்ல
கண்ணாடி வளையல்

கையை வீசி நடந்தால் - சும்மா
கலகலக்கும் வளையல்
வெயில் பட்டால் எங்கும்
வெளிச்சம் ஏற்றும் வளையல்

வானவில்லைப் போல - ஏழு
வண்ணங் காட்டும் வளையல்
பூனை விழிகள் போல - இரவில்
பளிச்சிடும் நல் வளையல்

தோழிகள் கூடி - கையை
தொட்டுப் பார்க்க வைக்கும்
வேளைக் கொன்றாய் அடுக்கி - நான்
வீதி வலம் போவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறக்கும் தட்டு வருகுது

பறக்கும் தட்டு வானிலே
பறந்து நிலத்தில் இறங்குதாம்
இறக்கை எதுவும் இல்லையாம்
இந்த பறக்கும் வண்டிக்கு

பளபளப்பாய் இருக்குமாம்
பார்ப்போர் கண்ணைப் பறிக்குமாம்
விழித்த கண்ணை வெட்டமுன்
விரைந்து எழுந்து மறையுதாம்

வட்டமான பொருளிதாம்
இரைச்சல் எதுவும் இல்லையாம்
குட்டையான மனிதராம்
இதனைக் கொண்டு வருகிறார்

எங்கிருந்து வருகுதாம்
ஏறி அதில் வருவோர் யார்?
அங்கு நாங்கள் போவோமா?
அவரைக் கண்டு கதைப்போமா?

சந்திரனின் மனிதரோ?
செவ்வாய்க் கிரக மக்களோ?
எங்கிருந்து வருகிறார்?
இந்த விந்தை மனிதரே

எங்கள் கிரகம் எதிலுமே
மனிதர் இல்லை என்கிறார்
அப்போ பறக்கும் தட்டிலே
அலையும் மாயக் குள்ளர் யார்?

சூரியனுக்(கு) அப்பாலே
தொலைவிலுள்ள ஊர்களில்
யாரும் மனிதர் இருப்பாரோ?
அவர்தான் இந்த ஆட்களோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிமையான சொற்கள், குழந்தைகளின் மனோவியலைப் பற்றிய புரிந்துணர்வு, வெறு மனே போதனைகளைத் திணிக்காமை, அறி வூட்டல் இவை குழந்தை இலக்கியத்தில் முக்கியமானவை. மு. பொ. வின் இத் தொகுப்பு மேற்குறித்த தன்மைகளைக் கொண்ட கவிதைத் தொகுப்பாகும். அத் தோடு இந்த மண்ணின் நினைவுகளையும் கிளர்த்தி சிறுவயதில் தாயகப் பற்றை ஊட் டும் கவிதைகளும் இதில் உள்ளன. 'விடு தலைப் புரு' 'எங்கள் நாடு' என்பவை அத் தகையது. விஞ்ஞான விந்தைகளை சிறுவர் மனதில் கேள்விச் சித்திரங்களாக்குவதில் 'அம்புலியில் பூபாலன்' 'பறக்கும் தட்டு' இர ண்டும் வெற்றி பெறுகின்றன. மொத்தத் தில் கரும்பாய் இனிக்கும் அரும்புக்கவிதைகள் சத்தற்ற பல வெளிவரும் குழந்தைக்கவிதை உலகில் முத்தான கவிதைகள் தந்துள்ளார் மு. பொ. இதை வெளியிடுவதில் பெருமை யடைகிறோம்.

சுயம் வெளியீட்டாளர்.

---

மணி ஓசை அச்சகம், — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org